THE HON. SRI R. VENKATARAMAN : கனம் அங்கத்தினருக்கு இப்போதைய நிலைமை தெரியவில்லை என்று நினைக்கிறேன். சிமெண்டு பற்றி எந்த விதமான கட்டுப்பாடும் இல்லை. அவர்கள் இப்பொழுது 50 சதவிகிதம் "பிரியாக" விற்கலாம் என்றுகூட சொல்லப்பட்டிருக்கிறது.

SRI A. VEDARATHNAM : சிமெண்டு இப்பொழுது ஏராளமாக உற்பத்தியாகி வெளிநாடுகளுக்குக்கூட ஏற்றுமதி செய்யக்கூடிய நிலையில் இருக்கக்கூடிய காரணத்தினாலே 50 சதவிகித கட்டுப்பாடு வைத்திருப்பதை, கட்டுப்பாடு இல்லாமலே செய்யமுடியுமா?

THE HON. SRI R. VENKATARAMAN : இந்தக் கட்டுப்பாடு மத்திய சர்க்காரால் செய்யப்படுகிறது. அதனால் எனக்கு பதில் தெரிந்தால்கூட சொல்வதற்கு இல்லை.

Weavers' societies

* 483 *Q.*—SRI V. K. KRISHNAMURTHI (on behalf of Sri A. E. Chandrasekara Nayagar) : Will the Hon. the Minister for Industries be pleased to state—

(*a*) the amount given to the North Arcot Central Co-operative District Bank out of the Cess Fund in 1957 for granting working capital loans to weavers' societies; and

(*b*) whether the entire amount had been distributed as loans to the weavers' societies in the district?

THE HON. SRI R. VENKATARAMAN : (*a*) A sum of Rs. 3 lakhs was given to the Vellore Co-operative Central Bank from the Cess Fund, prior to 31st March 1957, for providing working capital loans to weavers' co-operative societies in the district.

(*b*) Only a sum of Rs. 1,90,590 as been disbursed to the Weavers' Co-operative Societies so far by the Vellore Co-operative Central Bank. The balance will be utilized by the Central Bank to disburse working capital loans to Weavers Co-operative Societies in due course.

SRI N. K. PALANISAMI : ஸெஸ் நிதியிலிருந்து நமக்கு கிடைக்க கூடிய இந்த பணத்தை கைத்தறி நெசவாளர்கள் கடனை திருப்பி கொடுக்க மாட்டார்கள் என்ற காரணத்திற்காக அவர்களுக்கு கொடுப்பதில்லை என்பது சர்க்காருக்கு தெரியுமா? ஆகவே, இந்த சொஸைடி மூலம் அவர்களுக்கு ரூ. 300, 220 என்று இருப்பதையாவது கடனாக கொடுப்பதற்கு சர்க்கார் முன்வருவார்களா?

THE HON. SRI R. VENKATARAMAN : இந்தக் கடன்களெல்லாம் கோவாபரேடிவ் செண்டிரல் பாங்கு மூலமாக கொடுக்கப்படுகிறது. அதைத் திருப்பி வாங்கும் பொறுப்பு கோவாபரேடிவ் செண்டிரல் பாங்கினுடையது. அப்படியிருப்பதால் யார் கடனை திருப்பி கொடுப்பார்கள் என்பதை பரிசீலனை செய்யாமல் அவர்கள் எப்படி கடன் கொடுக்க முடியும் என்று கேட்கிறேன்.

Harijan Uplift

* 484 *Q.*—SRI K. RAMACHANDRAN (on behalf of Sri K. Sattanatha Karayalar) : Will the Hon. the Minister for Public Works be pleased to state—

(*a*) the amount allotted for Harijan Uplift in Tirunelveli, Ramanathapuram and Madurai districts during 1956–57; and

31st March 1958]

(*b*) the various items of work done out of the allotment and the amount surrendered?

THE HON. SRI R. VENKATARAMAN : (*a*) & (*b*) A statement[a] is placed on the table of the House.

வட ஆற்காடு ஜில்லாவில் கூட்டுறவுச் சங்கங்கள்.

*485 Q.—SRI V. K. KRISHNAMUORTHY (திரு. ஆற்காடு எ. சந்திரசேகர நாயகர் சார்பில்) : கனம் கைத்தொழில் அமைச்சர் அவர்கள் தயவுசெய்து பதிலளிப்பாரா—

(அ) 1952 லிருந்து இன்று வரை வட. ஆற்காடு ஜில்லா, வேலூர் மத்திய கூட்டுறவு பாங்கியில் காலம் கடந்த கடன் தொகை எவ்வளவு?

(ஆ) இது வரை வடஆற்காடு ஜில்லாவில் 1953 முதல் 1957 வரையில் எத்தனை கூட்டுறவு சங்கங்கள் கலைக்கப்பட்டன? கலைக்க உத்திரவிடப் பட்டன?

THE HON. SRI R. VENKATARAMAN : (*a*) The answer is placed on the table of the House. It is a small figure. So I shall read it.

On 30th June 1952—Rs. 5,61,080.
30th June 1953—Rs. 11,11,906.
30th June 1954—Rs. 8,92,809.
30th June 1955—Rs. 10,91,568.
30th June 1956—Rs. 5,87,020.
30th June 1957—Rs. 1,63,693.

(*b*) 79, Sir.

SRI R. SRINIVASA IYER : Sir, since the answer is about the time-barred loans, I desire to know whether these loans are recoverable?

THE HON. SRI R. VENKATARAMAN : Sir, I do not think they are time-barred. The answer only represents the outstandings on the closing date of the co-operative year.

SRI V. K. KOTHANDARAMAN : காலங்கடந்த கடன் தொகைகள் என்றால், அவைகளை இனிமேல் வசூலிக்கமுடியாதா? அப்படி வசூலிக்க முடியாதென்றால், அந்தப் பணத்திற்கு யார் ஜவாப்தாரி?

THE HON. SRI R. VENKATARAMAN : கனம் அங்கத்தினரே பதில் சொல்கிறார். அவர் கேள்வி போடவில்லை.

SRI A. VEDARATHNAM : காலங்கடந்த (காலாவதியான) கடன்களைப்பற்றியது மூலக் கேள்வி. கனம் அமைச்சர் கொடுத்திருக்கும் பதிலிலிருந்து, பல லட்சக்கணக்கான ரூபாய்கள் காலாவதியாகின்றன என்று தெரிகிறது. அப்படியானால், அந்தத் தொகைகளுக்கு யார் பொறுப்பாளி? அந்தத் தொகைகளை யாராவது வசூலிக்க முடியுமா அல்லது ஸொஸைட்டிக்கு நஷ்டமா என்று கனம் அமைச்சர் விளக்குவாரா?

THE HON. SRI R. VENKATARAMAN : தமிழில் "பிரெஸிஷன்" இல்லாததால் இந்த சந்தேகம் ஏற்படுகிறது. காலம் கடந்த கடன்கள் என்றால் "ஓவர்ட்யூஸ்" என்று அர்த்தம், "பார்ட் பை லிமிடேஷன்" என்று அர்த்தமில்லை.

---

[a] Printed as Appendix III on page 376 infra.